ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
வன மோகினி
ரூ 2



NON-STOP
SIZZLE
NON-STOP
ROUND 'N' ROUND
NON-STOP
TICK TOCK
NON-STOP
LACTO KING
Parry's
Lacto King
SO TASTY, YOU JUST CAN'T STOP EATING IT!
Parry's
Lacto King

HTA-8504

பிரேமதாசா படுகொலை

இலங்கை அதிபர் பிரேமதாசா மே 1-ந்தேதி தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவனால் படு கொலை செய்யப்பட்டார். வெடிகுண்டு வெடித்ததால் பிரேமதாசாவின் உடல் சிதைந்து அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார்.

குண்டு வெடிப்பில் அவருடைய பாதுகாப்பு அதிகாரிகள் உள்பட 40 பேர் இறந்து போனார்கள்.

படுகொலை செய்யப்பட்ட பிரேமதாசாவுக்கு 68 வயது ஆகிறது.

பிரேமதாசா 1924-ம் ஆண்டு சலவைத் தொழிலாளி குடும்பத்தில் பிறந்தார்.

அவர் புத்த மதத்தை சேர்ந்தவர். சிறுவயது முதல் புத்த மதத்தில் மிகவும் தீவிர பற்று கொண்டார்.

கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்த அவர், பிறகு ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

பிரேமதாசா தனது 15-வது வயதிலேயே அரசியலில் குதித்தார். இதன்மூலம் பெரிய அரசியல் தலைவர்களின் கவனம் இவர் மீது திரும்பியது.

1956-ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் ஆனார். கட்சி அரசியலில் தீவிரமாக ஈடுவதற்கு முன்னதாக கொழும்பு நகரசபையின் உறுப்பினர் ஆக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

அதன்பிறகு 1955-ம் ஆண்டு கொழும்பு நகரசபையின் துணை மேயர் ஆனார். அந்த வருடம் இலங்கை பாராளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

1965-ம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். அன்று முதல் கொழும்பு மத்திய பாராளுமன்ற தொகுதியில் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். வாக்

காளர் மத்தியில் தனக்கென்று ஒரு தனி அடித்தளத்தை பிரேமதாசா அமைத்துக் கொண்டார்.

1968-ம் ஆண்டு இலங்கை ஊராட்சி மன்றத்துறை மந்திரி யாக நியமிக்கப்பட்டார்.

1970-ம் ஆண்டு தேர்தலில் அவரது கட்சி தோற்றது. இதைத் தொடர்ந்து பாராளு மன்றத்தில் அவர் எதிர்க்கட்சி தலைவராக செயல்பட்டார்.

புத்த மதத்தை சேர்ந்த மக்கள் மத்தியில் பிரேமதாசா தனது செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். இதன் காரண மாகத்தான் இ ந் தி ய ா-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது, ஒப்பந்தத்தை எதிர்த்து, பிரேமதாசா கருத்து வெளி யிட்டார்.

அதன்பிறகு ஜெயவர்த்தனா வின் நம்பிக்கைக்கு பாத்திர மானார். இதைத் தொடர்ந்து இலங்கை அதிபர் ஜெயவர்த் தனா அவரை இலங்கை பிரதமராக ஆக்கினார்.

1988-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த ஜனாதிபதி தேர் தலில் பிரேமதாசா வெற்றி பெற்றார்.

பி ரே ம தா சா வு க் கு 25 இலட்ச ஓட்டுகளும், அவரை எதிர்த்து போட்டி யிட்ட திருமதி பண்டார நாயக்குக்கு 22 இலட்ச ஓட்டுகளும் கிடைத்தன.

1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ந் தேதி பிரேமதாசா ஜனாதிபதியாக பதவி ஏற்றார். அவருக்கு இலங்கை சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பிரேமதாசாவின் மனைவி பெயர் ஹேமா.

இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். ★

இலவசம்!

அன்பார்ந்த மாணவ-மாணவிகளே! 1-6-93 இதழ் "ராணிகாமிக்" சுடன் நோட்டு, புத்தகங்களில் ஒட்டும் வண்ண லேபிள்கள் இலவசமாக வழங்கப்படும்.

உங்கள் "ராணிகாமிக்" சுக்கு இப்பொழுதே கடைக் காரரிடம் சொல்லி வையுங் கள்! இலவசமாக வண்ண லேபிள்கள் பெறுங்கள்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

ராணி காமிக்ஸ்–214
(மாதம் இருமுறை இதழ்)

மே 16–31
1993

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

வன மோகினி

Tex Sampath Tirupur

சரக்குகளை ஓர் இடத்தில் இருந்து
மற்றொரு இடத்திற்கு எடுத்துச்
செல்ல ரெயில், கார், லாரி என்று
எத்தனையோ வசதிகள் இருக்
கின்றன. ஏன் விமானத்தில்கூட
சரக்குகளை ஏற்றிச் செல்கிறார்கள்.

ஆனால், பெங்காலியாவிற்கு அருகில் உள்ள
காட்டில் இன்னமும் கழுதைகள் மீதுதான்
சரக்குகளை ஏற்றிச் செல்கிறார்கள்.

வியாபாரிகள் தங்கம், வைரம் போன்ற விலை
உயர்ந்த பொருட்களைக்கூட பலத்த
பாதுகாப்புடன் எடுத்துச் செல்வார்கள்.

ஒருநாள் காட்டுக்குள் சென்றுகொண்டிருந்த வியாபாரிகள் சற்று இளைப்பாறுவதற்காக ஒரு குளக்கரையை அடைந்தார்கள்.
அதோ குளக்கரை வந்துவிட்டது! தண்ணீர் அருந்தலாம்!
அருமையான இடம்! இரவை இங்கேயே கழித்து விடலாம்!
ஆமாம்! நன்றாக இருக்கும்!
வியாபாரிகள் நிலவு ஒளியில் சமைத்து சாப்பிட்டார்கள்.
அப்போது—
ஏய்... அங்கே பார்!

அதோ
அங்கே!
அவன் காட்டிய திசையை அனைவரும் உன்னிப்பாக பார்த்தார்கள்.

குளத்தின் நடுவே ஒரு அழகான பெண் ஒய்யாரமாக
தண்ணீரின் மீது புன்னகையுடன் படுத்திருந்தாள்.

பார்ப்பவர்களை எல்லாம் சுண்டி இழுக்கும்
அளவுக்கு அவள் அழகு இருந்தது.

வியாபாரிகள் அவள் அழகில் மதிமயங்கிப் போனார்கள்.
ஆகா! என்ன அழகு!
தேவதை போல இருக்கிறாளே!
உடனே மூன்று வியாபாரிகள் அவளை நோக்கி ஓடினார்கள்.
மூவரும் போட்டி போட்டு நீந்திச் சென்றார்கள்.
வியாபாரிகளிடம் வேலைக்கு இருந்த காட்டுவாசி அவளைக் கண்டான்.
ஆ...! வன மோகினி போலிருக் கிறாளே!
ஒருவேளை எனக்காகக் காத்திருக்கிறாளோ!

அவளை நோக்கி நீந்திச் சென்ற வியாபாரிகள் திடீரென்று தண்ணீருக்குள் இழுக்கப்பட்டார்கள்.
ஆ...!
உள்ளே இழுக்கிறதே?
வா திரும்பி விடலாம்!
இதோ வருகிறேன் கண்ணே!
காட்டுவாசி ஓடிவந்தான்.
வியாபாரிகள் தண்ணீருக்குள் இழுக்கப்படுவதை கண்ட காட்டு வாசி திகைத்து நின்றான்.
ஆ...! என்ன இது?
அந்தக் காட்டுவாசி மாயாவியைத் தேடி காட்டுக்குள் ஓடினான்.
மாயாவி! மாயாவி:
நில்...! யார் நீ?
என்னை மாயாவியிடம் அழைத்துச் செல்லுங்கள்!
உடனே குள்ளர்கள் அவனை மாயாவியிடம் தூக்கிச் சென்றார்கள்.

நாங்கள் காட்டுக்குள் ஓர் இடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது வியாபாரிகள் கூச்சலிட்டார்கள்!
உடனே மூன்று வியாபாரிகள் சரசர வென்று குளத்துக்குள் இறங்கினார்கள்.

நான் அப்பொழுதுதான் அவளை கவனித்தேன். ஒரு அழகான இளம் பெண் தண்ணீரில் ஒய்யாரமாகப் படுத்திருந்தாள்!

நானும் அவளை நோக்கி ஓடினேன்.

ஆனால், அங்கே நடந்ததைப் பார்த்துவிட்டு நேராக இங்கே ஓடிவந்துவிட்டேன்!
மாயாவி நான் சொல்வது உண்மை! தயவுசெய்து வியாபாரிகளை காப்பாற்றுகள்!
அவர்களுக்கு என்ன, முதலில் அதைச் சொல்!
மூன்று வியாபாரிகளும் வனமோகினியை நோக்கி வேக வேகமாக நீந்திச் சென்றார்கள்.
திடீரென்று அவர்கள் தண்ணீருக்குள் மூழ்கினார்கள்!
அய்யோ... என்னைக் காப்பாற்றுங்கள்!

??
சில வினாடிக்குள் மூவரும் தண்ணீருக்குள் மூழ்கிப் போனார்கள்.
அதன் பிறகு வனமோகினி என்னைப் பார்த்து புன்னகை புரிந்தாள்.
ஆனால் நான் பயந்துபோய் இங்கே ஓடிவந்துவிட்டேன்!
மேலே சொல்!
திடீரென்று அவளைக் காணவில்லை. குளம் வெறிச்சோடி கிடந்தது.
உங்கள் பொருட்கள் பத்திரமாக இருக்கின்றனவா?

பொருட்களை ஏற்றி வந்து கழுதைகளை மரத்தில் கட்டிவைத்திருந்தேன்!
திரும்பி போய் பார்த்தேன். கழுதைகளையும் காணவில்லை. எல்லாம் மாயமாக மறைந்துவிட்டதைப் போல் இருந்தது.
கழுதைகளின் கால் தடயங்களை பார்த் தேன். ஒன்றும் இல்லை.
அபபடியா? குரன்! மோசஸ்! அவன் சொல் வதைக கேட்டீர் களா?
நானும் அது பற்றித்தான் யோசிக்கிறேன்!
அதன் பிறகுதான் உங்களைத் தேடிவந்தேன!
புதிராக இருக்கிறதே!
சரி இங்கேயே இரு! நான் போய் பார்த்து வருகிறேன்!
நானும் வருகிறேன்!
இடத்தை மட்டும் சொல்! நான பார்த்துக் கொள்ளுகிறேன்!
மியூக்கர் ரோடுக்கு அருகில்!
உடனே மாயாவி குதிரையில் புறப்பட்டார்.

அந்தக் குளக்கரையில் இறங்கினார்.
பெண்ணையும் காணவில்லை! மனிதர்களின் நடமாட்டமும் இல்லை! ஒருவேளை அவன் என்னை ஏமாற்றிவிட்டானா?
ஏதாவது கனவு கண்டு என்னிடம் உளறிக்கொட்டி விட்டானா?
இங்கே என் கால் தடத்தை தவிர வேறு இல்லையே! வியாபாரிகள்கூட இந்தப் பக்கம் வருவார்கள்!

ஏதோ ஒரு விபரீதம் இங்கு நடக்கிறது!
திடீரென்று– ஏதோ சத்தம் கேட்டது.
மாயாவி சுறுசுறுப்பானார்.
?
அங்கே வைர வியாபாரிகள் வந்துகொண்டிருந்தார்கள்.
இங்கே ஒரு குளம் இருக்கிறது! அங்கே போகலாம்! குளிர்ச்சியாக இருக்கும்!

வரட்டும்! என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!
குதிரைகளுக்கு தண்ணீர் காட்டலாம்! நாமும் இங்கேயே உணவருந்தலாம்!
இராப்பொழுதை இங்கேயே கழிக்கலாம்!
இவர்களுக்கு அந்தப் பெண் தென்படுகிறாளா என்று பார்ப்போம்!
மாயாவி மரத்தில் இருந்துகொண்டு அவர்களை நோட்டமிட்டார்.
ஏய்... அங்கே பார்...!
?
வியாபாரி ஒருவன் கூச்சலிட்டான்.

ஆ...!
வனமோகினி போலிருக்கிறது!
அந்த இளம்பெண் வழக்கம்போல ஒயிலாக தண்ணீருக்கு மேலே படுத்திருந்தாள். வியாபாரிகள் அவள் அழகில் மயங்கி விக்கித்து நின்றார்கள்.
ஏய்...! என்னைத்தான் கூப்பிடுகிறாள்!
அவள் வியாபாரிகளை கைகாட்டி அழைத்தாள்.
இல்லை! என்னை கூப்பிடுகிறாள்!
இதோ வருகிறேன்!
மூன்று வியாபாரிகளும் குளத்துக்குள் இறங்கி அவளை நோக்கி ஓடினார்கள்.
அப்படியானால் இவள்தான் வன மோகினியா?

மூவரும் அவளை நோக்கி வேகவேகமாக நீந்திப் போனார்கள்.
திடீரென்று மூவரும் தண்ணீருக்குள் இழுக்கப்பட்டார்கள்.
அவர்கள் ஏன் தண்ணீருக்குள் மூழ்குகிறார்கள்! நீச்சல் தெரியாதா?
வியாபாரிகள் மூவரும் தண்ணீருக்குள் தத்தளித்துக் கொண்டிருப்பதை வேடிக்கையுடன் பார்த்துக்கொண்டிந்தாள், அந்தப் பெண்.


உடனே மாயாவி மரத்தில் இருந்து குளத்துக்குள் குதித்தார்.
குளத்துக்குள் அவர்களை தேடினார்.
மாயாவி குளத்தின் அடி ஆழத்துக்குப் போனார். கும்மிருட்டாக இருந்தது.
அங்கே அந்த வியாபாரிகள் மூவரும் வலைக்குள் மாட்டிக்கொண்டு பிதுங்கிக்கொண்டிருந்தார்கள்.
?!

மாயாவி தன் பலம் முழுவதையும் திரட்டி
வலையை பிடித்து இழுத்தார்.
சிறிது நேரத்தில் வலை அறுபட்டு வாயைப் பிளந்தது.
பட்.. ப்டார்
உடனே வியாபாரிகள் விடுவிக்கப்பட்டு தண்ணீருக்கு மேலே கொண்டு வரப்பட்டனர்.
மூவரும் பதட்டத்துடன் மூச்சு வாங்கினார்கள்.
ஆ... அய்யோ...!
கரைக்குப் போய் உங்கள் குதிரைகளையும், சரக்கு மூட்டைகளையும் பாது காத்துக் கொள்ளுங்கள்!

மாயாவி அவர்களை கரைக்கு
அனுப்பி வைத்தார்.

மாயாவி மீண்டும் குளத்தின்
அடி ஆழத்துக்குச் சென்றார்.
அங்கே அந்த வலை உள்ளே
சென்றுகொண்டிருந்தது.

மாயாவி வலையை பின் தொடர்ந்து சென்றார்.
இந்த வலையை பின் தொடர்ந்து சென்றால் அவளை பிடித்து விடலாம் என நினைக்கிறேன்!

வலை மாயாவியை வேகமாக இழுத்துச் சென்றுகொண்டிருந்தது.
?

மூச்சு முட்டுகிறதே! காற்று வேண்டுமே?
ஆ... ஆ... ஊ...!
உடனே மாயாவி வலையை விட்டுவிட்டு தண்ணீருக்கு மேலே வந்தார்!
காற்று வாங்கிவிட்டு மீண்டும் ஆழத்துக்குச் சென்று வலையை பின் தொடர்ந்தார். வலை ஒரு குகையில் வந்தடைந்தது. மாயாவி மேலே வந்தார். அங்கே– ஒரு மொட்டையன் வலையை இழுத்துக்கொண்டிருந்தான்.
அவனுக்கு அருகில் மாயமாய் மறைந்து போன அந்த இளம் மங்கை நின்றுகொண்டிருந்தாள்...
இவள் இங்கே நிற்கிறாள்!

இவன் திருடன்! நம்மிடம் கொள்ளையடிக்க வந்திருக்கிறான்!
பிடியுங்கள் அவனை!
வனமோகினி கட்டளையிட்டாள்.
நான்கு பேர் மாயாவியை குறிவைத்தார்கள்.
நில்லுங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்!
நிறுத்துங்கள்! அவனை மேலே கொண்டு வாருங்கள்!

Tex Sampath Tirup

அவன் எனக்கு
உயிரோடு
வேண்டும்!
லோமரும் ஓமனும் தண்ணீருக்குள்
மாயாவியை தேடினார்கள்.
நான் இங்கே
இருக்கிறேன். எங்கே
கேடுகிறீர்கள்!
மாயாவி அவர்கள் இருவரின் தலையைப்
பிடித்து டமாரென்று மோதினார்.
டமார்..!
ஆ...!
ஆ...!

என்னாச்சு?
போனவர்களைக்
காணவில்லை?
ஏதோ ஆபத்து
என்று
நினைக்கிறேன்!
அனைவரும்
தண்ணீரையே
பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்.
திடீரென்று லோமரும் ஓமனும்
தண்ணீருக்கு மேலே வந்தார்கள்.
வந்தவர்கள் அப்படியே மிதந்தார்கள்.
லோமர், ஓமன்
என்ன நடந்தது?
இருவம்
இறந்து
விட்டார்கள்.
முகமூடியை
எங்கே?

இறந்து விட்டால் இவர்களால் எப்படி மிதக்க முடியும்?
முகமூடியை எங்கே?
மாயாவி தண்ணீருக்கடியில் இருந்து கொண்டு அவர்களை மிதக்க வைத்துக்கொண்டிருந்தார்.
திடீரென்று லோமரும், ஓமனும் தண்ணீரில் இருந்து எழும்பினார்கள்.
ப்ளக்...!
மாயாவி இருவரையும் தூக்கி வெளியே வீசினார்.

வீசிவிட்டு தானும் மேலே வந்தார்.
!
எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கடுமையாக தாக்கினார்.
கும்
கும்
அவர்கள் வீழ்ந்ததைக் கண்டதும் அந்தப் பெண் குகைக்குள் சென்றாள்.
ஏய்... பெண்ணே! நில்! எங்கே ஓடுகிறாய்!
மாயாவி அவளை பின்தொடர்ந்தார்.

?
என்னைப் பார்க்க வேண்டுமா?
ஆமாம்!..!
உள்ளிருந்து அவள் குரல் கேட்டது
அங்கே இருந்த பாதாள அறை சொர்க்கம் போல காட்சி அளித்தது. விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் இருந்தன.
ஏய். என்ன இது?
எதிரில் அவள் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தாள்.
மரியாதையாக துப்பாக்கியை கீழே போடு!

உடனே மாயாவி உறையில் இருந்து துப்பாக்கிகளை எடுத்தார்...
திரும்பாதே!
துப்பாக்கிகளை கீழே போட்டார்.
அப்படி வா வழிக்கு!
சரி அப்படி தரையில் உட்கார்!
இல்லை! நான் யார்முன்னும் உட்காருவது இல்லை.
அப்படியா?
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்...!
உடனே அவள் மாயாவியின் காலுக்கருகே சுட்டாள்.
நான் அடுத்த தடவை சுடுவதற்குள் நீ உட்கார்ந்துவிட வேண்டும்! இல்லை...!

உடனே மாயாவி தரையில் அமர்ந்தார்.
யார் நீ?
அதையே நானும் கேட்கிறேன்!
நான் கேட்டதற்கு முதலில் பதில் சொல்!
உனக்கு திமிர் அதிகம்! உன் உயிரை பாதுகாத்துக்கொள்!
நாங்கள் வியாபாரிகளிடம் கொள்ளையடிப்பதை நீ பார்த்துவிட்டாய்...!

வியாபாரிகள் என் அழகில் மயங்கிப்போய் மாட்டிக்கொள்கிறார்கள்!
அவர்களை என்ன செய்வோம் தெரியுமா? தீக்குள் தள்ளி விடுவோம்!
அவர்களை பிடித்துவந்து கொன்றுவிடுகிறாயா?
ஆமாம்...!
முகமூடி உள்ளேதான் சென்றிருக்க வேண்டும்!
வா, பார்க்கலாம்!
அவன் எப்படி இரகசிய அறைக்குள் நுழைந்தான்!
மோரா...! மோரா...!

நான் இவரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் போகலாம்!
மோரா! இவன் ஆபத்தானவன். எதுவும் தொல்லை தரலாம்!
அதெல்லாம் எனக்குத் தெரியும்! முதலில் கதவை மூடிவிட்டு வெளியே செல்லுங்கள்! நான் கூப்பிடும்வரை யாரும் உள்ளே வரக்கூடாது!
முதலில் இந்த முகமூடியை கழட்டு!
அது மட்டும் என்னால் முடியாது!
மோரா மாயாவியின் முகமூடியில் கைவைக்கப் போனாள்.

Tex Sampath Tirupur

இருவரும் துப்பாக்கியுடன் உள்ளே வந்தார்கள்.
மரியாதையாக துப்பாக்கியை கீழே போடுங்கள்!
இருவரும் துப்பாக்கியை கீழே போட்டனர்.
ஆ... ஆ...!
இருவரும் வெளியே போய் கதவை மூடுங்கள்!
மோரா! இப்பொழுது பேசலாமா?
என்ன நடக்கிறது?
மோரா! துப்பாக்கி என் கையில். இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்!.
உங்களுடைய அசாத்திய துணிச்சலை பாராட்டுகிறேன!
நாம் இருவரும் இணைந்து கொள்ளையடிப்போம். கிடைப்பதில் ஆளுக்கு பாதி!
வேண்டாம்!
அப்படியானால் முக்கால்பங்கு தருகிறேன்!

ஒவ்வொரு கொள்ளையிலும் முக்கால் பங்கு. இது தான் என் கடைசி முடிவு!
மோரா! நான் உன்னிடம் பங்கு கேட்டு வரவில்லை!
அப்படியானால்! எதற்காக இங்கே வந்தீர்கள்?
வனமோகினி போல அலைந்துகொண்டிருக்கிறாயே! அதன் உண்மை எனக்கு தெரியவேண்டும்!
எத்தனை வருடங்களாக வியாபாரிகளை பிடித்துக் கொண்டிருக்கிறாய்!
ஐந்து ஆறு ஆண்டுகள் இருக்கும்!
வியாபாரிகளை பிடித்து கொன்றுவிடுவது உண்மையா?
அவர்கள் பணத்துக்கு சமமான வர்கள். எப்படிக் கொல்லுவேன்!

வியாபாரிகளை மயக்கி, குளத்துக்குள் இறக்கி வலையால் பிடித்து, விடுவோம்!
பிறகு அவர்களை வடக்கே கொண்டு போவோம்!
அங்குள்ள சந்தைகளில் அவர்களை விற்றுவிடுவோம்!
மனிதனை அடிமைகளாக விற்றுவிடுவாயா?
கொல்வதற்கு இது எவ்வளவோ பரவாயில்லை அல்லவா!
அதில் கிடைக்கும் பணம் பொருளை நாங்கள் பிரித்துக்கொள்வோம்!


இதோ கடந்த மூன்று நாட்களில் கிடைத்த பொருட்கள் இவை. இதில் முக்கால் பங்கு உனக்கு தருகிறேன்!
?!

அதேநேரம்– மாயாவியால் காப்பாற்றப்பட்ட மூன்று வியாபாரிகள் குளத்தில் இருந்து கரை ஏறினார்கள்.
ஆ...ஆ...!
கடுமையாக மூச்சிரைத்தது.

தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.
இது ஆபத்தான இடம். உடனே புறப்படுங்கள்!

அப்போது– வனமோகினி மோராவின் ஆட்கள் துப்பாக்கியுடன் அவர்களை மறித்தனர்.
அசையாதீர்கள்!

இப்பொழுதுதான் எனக்கு இந்த இரகசிய இடம்பற்றி தெரிகிறது!
நான் காப்பாற்றிய வியாபாரிகள் வெளியில் போய் விசயத்தை பாப்பிவிடுவார்கள்.

அது நடக்காது! என் ஆட்கள் இந்நேரம் அவர்களை மடக்கி யிருப்பார்கள்!
அவர்களை வடக்கு நாடுகளில் விற்க கொண்டு சென்றிருப்பார்கள்!
Tex Sampath Tirupur

என்ன முகமூடி என்னுடன் சேர்ந்து கொள்கிறீர்களா?
இல்லை! அது முடியாது!

சரி உன்னைப்பற்றி எனக்குத் தெரிய வேண்டும்!
என்னைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமா?
ஆமாம்! துப்பாக்கி என்னிடம் இருந்தால் நீ பேசமாட்டாய்!
நான் என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டேன்! உன்னுடையதை நீயே வைத்துக்கொள்!
?
மாயாவி துப்பாக்கியை போட்டதும் அவள் டக்கென்று எடுத்துக் கொண்டாள்
நான் ஏற்கனவே உன் துப்பாக்கியில் இருந்து குண்டுகளை எடுத்து விட்டேன்!
ஏய்...நீ....!

பரவாயில்லை! என் விக்கை கழட்டட்டுமா?
எரிச்சலாக இருக்கிறதா?
சரி எடுத்து விட்டு உன் கதையைச் சொல்!
மோரா தன் தலைவிக்கை எடுத்தாள். அதனுள் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தியை எடுத்தாள்.
கத்தியை எடுத்தவள் சடாரென்று மாயாவியை நோக்கி வீசினாள்.
டமீல்!
மாயாவி விடுவாரா? உடனே தன் துப்பாக்கியை எடுத்து பறந்துவந்த கத்தியை நோக்கிச் சுட்டார்.
டமீல்!
அடுத்த நிமிடம்– கத்தி இரண்டு துண்டாக தெறித்து விழுந்தது.
இந்த விளையாட்டெல்லாம் என்னிடம் பலிக்காது! ம்... உன் கதையைச் சொல்!
ஒருநாள் நான் என் அப்பாவின் திராட்சை தோட்டத்தில் பழம் பறித்துக் கொண்டிருந்தேன்!

அப்பொழுது சிலர் என்னை கடத்திச் சென்றுவிட்டார்கள்.
அப்பொழுதுதான் நான் முதன் முதலாக இந்த குளக்கரையை கண்டேன்.
பாலைவனம் வழியாக வடக்கே கொண்டு சென்றார்கள்.
அங்கே என்னை விற்கத் துணிந்துவிட்டார்கள்.
நான் அழகாக இருப்பதால் ஏகப் பட்ட போட்டி!
4 ஆயிரம் பொற்காசுகள்!
5 ஆயிரம் பொற்காசுகள்!
இருவருக்கும் சண்டை வந்துவிட்டது.

பிறகு அதுவே கோஷ்டி பூசலாக மாறிவிட்டது.
டமார்..!
திடீரென்று வெடிகள் வெடித்தன.
கூட்டம் கலைய ஆரம்பித்துவிட்டது.
ஆ...ஆ...!
ஆச்...!
ஒரு மந்திரவாதி முன்வந்தான்.
10 ஆயிரம் பொற்காசுகள் தருகிறேன். இவளை என்னிடம் ஒப்படை!
இல்லை கூடாது!
ஒருவன் தடுத்தான்.
உடனே மந்திரவாதி சிறிய உருண்டை ஒன்றை அவனை நோக்கித் தூக்கிப் போட்டான்.

ஆ...!
டமார்...!
அடுத்த நிமிடம் உருண்டை வெடித்தது.
இன்னமும் யாராவது என்னுடன் போட்டி போடப் போகிறீர்களா?
இல்லை! இல்லை!
ஏய்... பெண்ணே! என்னுடன் வா!
!
இந்தா பத்தாயிரம் பொற்காசுகள்!
அந்த மந்திரவாதி என்னை அழைத்துக் கொண்டு புறப் பட்டான்.
நாம் இங்கே இரவை கழித்து விட்டு செல்லலாம்!
நான் திரும்பவும் அதே குளக்கரைக்கு கொண்டுவரப் பட்டேன்!

என்னை தொடர்ந்து வா!
அவன் என்னை ஒரு குகைக்குள் அழைத்துச் சென்றான்.
அந்த குகைக்குள்ளேதான் மந்திர வித்தைக்கு தேவையான பொருட்களை எல்லாம் வைத்திருந்தான்.
அவன் எனக்கு மந்திர வித்தைகளை கற்றுக்கொடுத்து அவனுக்கு உதவியாக வைத்துக்கொண்டான்!
அதன்பிறகு தண்ணீரில் மிதக்கும் இரகசியத்தை கற்றுக்கொடுத்தான்.
ஒருநாள் இரவு, இரவு விடுதியில் வித்தைக்காட்சி நடந்துகொண்டிருந்தது.
அப்போது திடீரென்று அங்கு கொள்ளையர்கள் புகுந்து விடுதியையே படாதபாடு படுத்திக்கொண்டிருந்தார்கள்.

ஆய்...!
மந்திரவாதி தடுமாறிப் போய் சுவரில் மோதி விழுந்தான்.
விழுந்தவன் திரும்ப எழவில்லை!
ஆகா! எனக்கு விடுதலை!
மந்திரவாதி இறந்து விட்டான்! இனி நான் யாருக்கும் அடிமை இல்லை!
அடிமை இல்லை என்ற சந்தோசத்தில் என் உடமைகளை எடுக்க ஓடினேன்.
அப்போது— ஒட்டகக்காரன் குறுக்கே வந்தான்.
!
மந்திரவாதி இறந்துவிட்டான்! இனி நீ எனக்குச் சொந்தம்!

இனி நான்தான் உனக்கு எல்லாம்! நீ என் சொத்து!
மந்திரவாதி சிறிய வெடிகுண்டுகளை கண்ணாடிக் குடுவையில் வைத்திருப்பது நினைவுக்கு வந்தது.
அதில் வெள்ளை நிறத்தில் இருப்பது சும்மா புகையை மட்டும் வெளியேற்றும்.
ஆனால் கறுப்புக்குணடு ஆளையே காலி செய்துவிடும் அளவுக்கு சக்தி வாய்ந்தது..
உடனே நான் கறுப்புக்குண்டை எடுத்து ஒட்டகக்காரன் மீது வீசினேன்.
ஆ... அய்யோ!
டமார்...!
ஒட்டகக்காரன் செத்து விழுந்தான்.

உடனே நான் எனக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.
அதிலிருந்து நான் எனக்குத் தெரிந்தவற்றை வைத்து இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!
சரி தண்ணீரில் மிதப்பது எப்படி?

அது குளத்தில் ஒரு சிறிய வேலைதான்!
மோரா அந்த முகமூடியிடம் பேசிக் கொண்டிருக் கிறாள்!
வியாபாரி களை பிடித்து வந்திருப்பதை சொல்லிவிடு!
மோரா! வியாபாரிகளை கொண்டு வந்து விட்டோம்!
பரவாயில்லை! எனக்கு இப்போது நேரமில்லை!
இன்னும் ஒரு கேள்வி! பெண்களை பிடித்தால் என்ன செய்வாய்?
அவர்களை விட்டுவிடுவேன். ஏன் என்றால் என்னை கடத்தினது ஆண். விற்றது ஆண். அடிமைப்படுத்தினது ஆண்! அதனால் என் குறி ஆண்கள் மீதுதான்!
பேசிக்கொண்டிருக்கும் போதே மோரா குடுவையில் இருந்து உருண்டைகளை எடுத்தாள்.
ஆண்களைத்தான் பழிக்குப்பழி வாங்குவேன்!


இந்த கறுப்பு உருண்டை உனக்குத்தான்!
உன் உயிரைக் குடிக்கப் போகிறது!
உடனே உருண்டையைத் தூக்கி மாயாவியிடம் வீசினாள்.
மாயாவி சட்டென்று பாய்ந்து சென்று அந்த கறுப்பு உருண்டையை பிடித்துக்கொண்டார்.
!
என்னிடமே விளையாட்டு காட்டுகிறாயா?
அதற்குள் மோரா ஒரு வாளை உருவினாள்.

இத்தோடு உன் கதை முடிந்தது!
ஏன் இப்படி ஆத்திரப்படுகிறாய்!
மாயாவி உறையில் இருந்து துப்பாக்கியை உருவினார்.
மாயாவி வாளை நோக்கிச் சுட்டார். மோரா வாளின் பிடியை நழுவவிட்டாள்.
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்...!
மோரா பறப்படலாமா?
எங்கே?
அது இரகசியம்! முதலில் உன் ஆட்களை கூப்பிடு!

இங்கேயேவா? எதற்கு?
அவர்களுடைய பங்கை கொடுக்க வேண்டாமா?
மோரா அவர்களை அழைத்தாள்.
ஜானை தவிர நாங்கள் அனைவரும் இங்கேதான் இருக்கிறோம்!
ஒவ்வொருவராக உள்ளே வாருங்கள்!
முதலில் ஒருவன் உள்ளே நுழைந்தான்.
இந்தா உன் பங்கு!
கும்...!
ஆ...!
ஜான் வியாபாரிகளை மடக்கி வைத்திருந்தான்.
ஆகா! நாங்கள் உங்களிடம் கொள்ளையடித்ததை பங்குபோடுகிறோம்!
அடுத்து!
நான்தான்!
உள்ளே வந்தவர்களை மாயாவியின் இரும்புக்கை பதம்பார்த்தது
அம்மா!
கும்! கும்!
ஆ....

ஜான்! நீ வந்து உன் பங்கை பெற்றுக்கொள்!
இவர்களை என்ன செய்வது?
உள்ளே அழைத்து வா!
எனக்கு எவ்வளவு தேறும்!
ஒன்றும தேறாது! மரியாதையாக அவர்களின் கட்டுகளை அவிழ்த்துவிடு!
இவர்களை ஏன் அவிழ்த்து விடச் சொல்கிறீர்கள்!
சொன்னதைச் செய்!
அவிழ்த்துவிட்டேன்! என் பங்கு...!
உன் பங்குதானே! இதோ...!
கும்...!

என்னைத் தெரிகிறதா?
தெரியுமாவா? குளத்தில் எங்கள் உயிரை காப்பாற்றி னீர்களே!
இப்போது நீங்கள் இந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவர்களை கட்டிப் போடுங்கள்!
நாம் இப்போது புறப்பட போகிறோம்!
நாமா? எங்கே?
அவர்களை அனுப்பிவிட்டு இருக்கிற பொருட்களை எல்லாம் சுருட்டிக்கொள்ளப் பார்க்கிறாயா?
அது உன் நினைப்பு! அதற்கு நான் என்ன செய்யமுடியும்!
சரி வா புறப் படலாம்!
எங்கே?
வடக்கே! ஆட்களை எல்லாம் விற்கிறார்களே! அந்த சந்தைக்கு
வேண்டாம்!

வேண்டுமானால் நீ போ!
இல்லை நாம்தான் போக வேண்டும்
நாமா? என்ன விளையாடுகிறாயா? அங்கே போய் என்னை விலை பேசப் போகிறாயா?
இல்லை நான் வரமாட்டேன்! முதலில் உன்னைக் கொல்ல வேண்டும்!
உன்னை விற்க மாட்டேன் பயப் படாதே!
பிறகு எதற்காக அழைக்கிறாய்!
அந்த மார்க் கெட்டுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!
எப்படி முடியும்! அங்கே போனால் உன்னை தொலைத்து விடுவார்கள்!
அங்கே நீ என்னை விற்கமாட்டாய் என்று எப்படி நம்புவது?

நம்பித்தான் ஆக வேண்டும்! முதலில் உடைமாற்றி புறப்படவேண்டும்!
நான் உன்னை நம்புகிறேன்! வா புறப்படலாம்!
ஒகே. மோரா!
உடனே மாயாவியும், மோராவும் ஆட்களை அடிமைகளாக விற்கும் சந்தைக்கு புறப்பட்டார்கள்.
மோரா! பின்னால் யாரோ குதிரையில் வருகிறார்கள்! வா பதுங்கிக் கொள்ளலாம்!
மாயாவி மரத்தில் ஏறிக் கொண்டார்.
இரண்டு பேரும் சந்தைக்குத்தான் செல்கிறார்கள் என்று நினைக் கிறேன்!
அவர்கள் இருவரும் மரத்தில் மாயாவியை பார்த்ததும் திகைத்துப் போனார்கள்.
ஆ...! யார் இது?

உடனே மாயாவி அவர்கள் மீது பாய்ந்தார்.
ப்டார்...!
கும்...! கும்!
இருவருக்கும் செமக் குத்துக் கொடுத்தார்.
மோரா! இவர்களை கட்டிப் போடு!
ஏன்? எனக்கு குழப்பமாக இருக்கிறது!
இருவரையும் மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு அவர்கள் உடையை களைந்தார்கள்.
இவர்கள் உடை நமக்கு எதற்கு?
தங்கம் வைத்திருக் கிறார்கள்!
இருவரும் கழுத்தில் தங்கத
கட்டி வைத்திருந்தார்கள்.
நமக்கு அவர்கள் உடைதான் முக்கியம்!
தங்கத்தை நான் எடுத்துக் கொள்ளட்டுமா?
அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாதே!
மோரா! இதை உடுத்திக்கொள்!
இதையா?

Tex Sampath Tirupur

இதோ இதுதானே அந்த வார்த்தை!
பளார்!
!
பளார்!
அவர்கள் தலையை பிடித்து மோதினார்.
ஆ... அம்மா!
டமார்...!
மாயாவி இருவரையும் நையைப் புடைத்தார்.
கடைசியில் இருவரும் வியாபாரம் நடக்கும் இடத்துக்கு வந்தார்கள்.
மோரா! அது என்ன வழக்கமான வார்த்தை!
எனக்கு தெரியவில் லையே! அடிக்கடி சட்டதிட்டங்களை மாற்றிக்கொள்ளுவார்கள்!
மேடையில் ஒருவனை நிறுத்தி ஏலம் விட்டுக் கொண்டிருந்தார்கள்.
ஆள் பலசாலி! உடம்பை பாருங்கள்!
ஆயிரம் பொற்காசுகள்!
10 ஆயிரம் பொற்காசுகள்!
மாயாவி அங்கே வந்து ஏலம் கேட்டார்.
20 ஆயிரம் பொற்காசுகளா? உங்கள் பெயர் என்ன?
என் இளவரசருக்கு இவன் தேவை. இந்த இடத்தில் எல்லாம் அவர் பெயரை சொல்ல மாட்டேன்!
!
20 ஆயிரம் பொற்காசுக்கு எங்கே போவீர்கள்!
பேசாமல் இரு!

இவள் நல்ல அழகி!
5 ஆயிரம் பொற்காசுகள்!
20 ஆயிரம் பொற்காசுகள்!
அங்கே ஏலம் பேசப்படுகிறவர்களை எல்லாம் மாயாவி வாங்கிக்கொண்டார்.
10,000... 30,000... 50,000... 25,0
அனைவரையும் இவரே வாங்கிக் கொண்டாரே!
இவனை இதற்குமுன் பார்த்ததில்லையே!
இப்படி பேரம் பேசிவிட்டாரே... கையில் ஒரு சல்லிகாசு கூட கிடையாதே!
இதுவரை யாரும் இப்படி ஏலம் கேட்டதில்லை!
உங்கள் கோடீசுவரன் எங்கே இருக்கிறார்?

அடிமைகளை அங்கே அழைத்துவந்து பொற்காசுகளை பெற்றுக் கொள்ளுங்கள்!
அவர் பாலைவனததுக்கு அந்தப் பக்கம் இருக்கிறார்!
அனைவரையும் அழைத்துச் சென்று பொற்காசுகளை வாங்கி வருவோம்!
எனக்கு இது பிடிக்கவில்லை!
பார்த்தால் பெரிய புள்ளி போல தெரிகிறது!
மாயாவி 24 அடிமைகளை வாங்கியிருந்தார். அனைவரும் அணிவகுத்து மாயாவியை பின்தொடர்ந்தனர்.
வசமாக மாட்டிக்கொள்ளப் போகிறீர்கள்!
பொறுத்திருந்து பாரேன்!

என் இளவரசர் அங்கேதான் இருக்கிறார். வாருங்கள் போய் பார்க்கலாம்.
மாயாவி அவர்களை அழைத்தார்.
அவரிடம் எச்சரிக்கையாக பேசவேண்டும். இல்லை சட்டென்று கோபம் வந்துவிடும்!
எப்படி பேச வேண்டும்!
இதோ இப்படித்தான!
படார்...! படார்...!
ஆ... அம்மா...!
ஏய்...! உன் ஆட்களை துப்பாக்கியை கீழே போடச் சொல்...!
டேய்... கீழே போட்டுத் தொலையுங்கள்!
போடுங்கடா...!
மோரா! அடிமைகளின் கட்டுக்களை அவிழ்த்துவிடு!
உண்மை யாகவா?

அடிமைகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.
இனி நீங்கள் யாருக்கும் அடிமைகள் இல்லை! காட்டிலாகாவினர் வருவார்கள். உங்களை அழைத்துச் செல்வார்கள்!
தவறு செய்வர்களை சிறையில் தள்ளுவோம்! கவலை வேண்டாம்!
ரொம்ப நன்றி!
யார் நீங்கள்!

மாயாவி ஆட்களை கடத்திவந்து விற்பவர்களை எல்லாம் பிடித்து வந்தார்.
இனி எங்குமே அடிமைததனம் இருக்கக்கூடாது! எல்லாருக்கும் சுதந்திரம் உண்டு!

மோரா! உன் பழிவாங்கும் எண்ணத்தை இத்துடன் விட்டுவிடு! அதுபோதும்!
எனக்கு?

நீதிமன்றத்தில் உனக்கு சாதகமாகவே தீர்ப்பு கிடைக்கும். பயப்படாதே!
தண்டனை கிடைத்தாலும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வேன்!
மறுநாள் பத்திரிகையில் செய்தி வந்தது.
மனிதர்களை அடிமைகளாக ஏலம் விடுபவர்கள் கூண்டோடு கைது!
மாயாவி ஒரு வேலையை முடித்துவிட்ட திருப்தியோடு தன் இருப்பிடத்துக்கு திரும்பினார்.
குகையில்—
என்ன மாயாவி! நான் சொன்னது உண்மைதானே!
இல்லை எல்லாம் கனவு!
அவன் சொன்னது உண்மை! அவர்களை ஒப்படைக்க வேண்டிய இடத்தில் ஒப்படைத்துவிட்டோம்! இனி கவலை இல்லை!
(முடிந்தது)

அடுத்த
காமிக்ஸ்

பிளாஷ்கார்டன்

தோன்றும்

மனித வேட்டை

விண்வெளிப் படக்கதை

படிக்கத் தவறாதீர்கள்!

ஜூன் 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

''பளபள நிப்பு தோற்றம் ஜொலிப்பு
கேம்ளினால் என் ஹோம் ஓர்க் விறுவிறுப்பு.''

மாயா பாஷாவின் ரகசியம் — கேம்ளின்

ஃபவுண்டன் பேனாக்கள். அதன் உன்னத நிப்பு மளமளனு விறுவிறுனு எழுதும்.

ஆகவேதான் மாயா பாஷா தன் ஹோம் ஓர்க்கை ஃபடக்குனு முடிக்கிறான். விளையாட அதிக நேரம் கிடைக்குது.

camlin

கைகொடுக்கும் கை

Contract.CL.922.93.Tm

RANI COMICS
TAMIL FORTNIGHTLY
Regd. No. TN/MS (S)/461
Registered as Newspaper in Sri Lanka

PRESENT SIR !



Never absent from classrooms and school bags, play fields and lockers, short breaks and lunch breaks.

ampro® Milk Base
The School going Biscuit